Praise the Lord:

நமது கன்மலையும் மீட்பருமாகிய கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆத்துமாவிலே பெலப்படுத்துவாராக. ஆமென். தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். அவர் நமக்கு நியமித்த கிரியைகளை செய்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைகளை வாசித்து தியானித்து நாமும் அவரோடு சேர்ந்து, அவருடைய சித்தப்படி ஜெபிக்க உற்சாகப்படுவோம். ஆமென்.

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. (2 Cor 3:17)

**வார்த்தைக்காக ஜெபிப்போம். . .** *பரிசுத்தத்தில் மகத்துவமானவரே. . .உயிர்ப்பிக்கும் ஆவியானவரே. . . எஜமானராகிய கிறிஸ்துவே. . . . .*

*எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது.*

***ஜீவனுள்ள வசனங்களை தியானிக்கவும் உமது சித்தத்தின்படி உம்மோடு சேர்ந்து நாங்கள் ஜெபிக்கவும். . .***

**நம்மாலே நேரடியாக காணமுடியாதபடி இருந்த சர்வவல்லமையுள்ள கர்த்தர்,**

**பல அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்து, இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்து, தமது விசேஷித்தவர்களாக வழிநடத்தி வரும்போது, மோசே மூலமாக அவர்களுக்கு ஒரு கட்டளையை அறிவிக்கிறார்.**

யாத்திராகமம்/Exodus 19:5 & 8 (பக்கம்: 93)

இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது.

அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தான்.

Now if you obey me fully and keep my covenant, then out of all nations you will be my treasured possession. Although the whole earth is mine, …the people all responded together "We will do everything that LORD has said" (NIV)

***என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால்***

என்று சொல்கிற தேவனுடைய வார்த்தைகளை சிந்தித்து தியானித்துப் பாருங்கள்.

*From* **யாத்திராகமம்/Exodus 19:5**

***In Tamil:*** **என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால்,**

***In English:*** obey me fully (NIV)

obey my voice indeed (KJV)

obey My voice in truth (AMP)

***Meaning:*** obey: **to comply with or follow the commands, to respond conformably in action**

**இந்த தேவனுடைய வார்த்தைக்கு, மக்கள் எல்லோரும் ஏகமாய் "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" என்று பதில் சொன்னாலும், அவர்கள் தொடர்ந்து நிலைத்து நிற்க இயலாதவர்களாய் அவர்களின் பெலவீனங்கள் பல சூழ்நிலைகளிலே அவர்களை கர்த்தரை விட்டு விலக வைத்தது.**

**அப்படியே அவர்களை விட்டுவிடாமல். . ..**

உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன். **என்று வாக்குக்கொடுத்த கர்த்தர்.**

**மனுஷர்களோடு மனுஷராக இருந்து மனுஷர்களை மறுபடியும் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ள சித்தம் கொண்டார்.**

**இனியும் இந்த மக்கள் இப்படி தன்னை விட்டு விலகாமல் இருப்பதற்காக , அவருடைய உபதேசத்திலே நிலைத்திருக்கும்படி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அறிவிக்கிறார்.**

யோவான்/John 8:31-32 (பக்கம்: 138)

**இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி**: நீங்கள் என் உபதேசத்தில் **நிலைத்திருந்தால்** மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;
சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.
To the Jews who had believed him, Jesus said, "If you hold to my teaching, you are really my disciples. Then you will know the truth, and the truth will set you free." (NIV)

## *From* யோவான்/John 8:31

***In Tamil:*** என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்

***In English:*** **If you hold to my teaching (NIV)**
**If ye continue in my word (KJV)**
**If you abide in My word (NKJV)**
**Abide [hold fast to My teachings and live in accordance with them], (AMP)**

*Meaning*: **abide:** **To continue to be sure or firm, to endure, sustain, or withstand without yielding**

**வார்த்தையாக இருக்கும் அவரோடு நாம் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்.**
வார்த்தைகளை கேட்டு, கைக்கொள்ளச் சொன்னவர். . .. . வார்த்தைகளிலே உறுதியாக நிலைத்திருக்க சொன்னார்

## *From* யாத்திராகமம்/Exodus 19:5

***In Tamil:*** **என் வாக்கை உள்ளபடி கேட்டு,**
**என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால்,**

*Meaning*: obey: **to comply with or follow the commands, to respond conformably in action**

## *From* யோவான்/John 8:31

***In Tamil:*** என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்

*Meaning*: **abide:** **To continue to be sure or firm, to endure, sustain, or withstand without yielding**

*பழைய / புதிய ஏற்பாட்டு வசனங்களை சேர்த்து தியானியுங்கள்.*
முன்பு, பாதிவழியில் வனாந்தரத்தில் இருந்தவர்கள் ஏகமனதாக சம்மதித்தார்கள்.
இப்பொழுதோ தேவாலயத்திலே இருந்தவர்கள் சம்மதத்திற்கு மாறாக பலவிதமான வாக்குவாதங்களை ஏறெடுத்து. . அவரை எதிர்த்தும் நின்றார்கள்.
*இருதரத்தாரிலும் பலர் கர்த்தரில் நிலைத்திருக்க முடியாமல் பெலவீனப்பட்டார்கள்*
**முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். ஆமென்.**
இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் வாழ்ந்த நாட்களில், அவர் செய்த அநேக காரியங்களையும் எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாததென்று வேதம் சொல்கிறது. . . .
அவர் அநேக அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து பிதாவை மகிமைப்படுத்தினார்.
**தம்முடைய சீஷர்களுக்கும்,** . . சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்.
எப்படி எனக்கு சாட்சியாக இருந்து, உலகத்துக்கு வெளிச்சமாக இருக்கவேண்டும்? என்றும் தான் பிதாவின் சித்தம் நிறைவேற்றி, பிதாவிடம் சென்றபிறகு ஒரு தேற்றவாளனை உங்களுக்கு அனுப்பி முடிவுபரியந்தம் உங்களை வழிநடத்துவேன். என்றும் . . . .
இப்படி அருமையாக அவர்களை ஆலோசனைகள் கொடுத்து வழிநடத்தி, **தமது கடைசிநேரத்தில்,** பிதாவிடம் அவர்களுக்காக மன்றாடினார்.

யோவான்/John 17:20-21 (பக்கம்: 153) *(3 காரியங்களை தியானியுங்கள்)*

1. நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.
2. அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், **பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக,**
**3.** நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்த அதிகாரத்தை வீட்டிலே போய் மீண்டும் மீண்டும் வாசித்து தியானித்து பாருங்கள். . ..
கிறிஸ்துவினுடைய இந்த ஜெபம். . . இந்த உலகத்தின் பற்றுதல்களை நம்மைவிட்டு நீக்கிவிடும், அதேசமயம் இந்த உலகம் கிறிஸ்துவை விசுவாசிக்க நாம் பிரயாசப்படவேண்டும் என்ற வாஞ்சையும், உற்சாகமும், உந்துதலும் வல்லமையாக நம்மிடமிருந்து புறப்பட்டு வரும். ஆமென்.

கிரியையோடுகூடிய விசுவாசம், விசுவாசத்தோடு கூடிய ஜெபம் பூரணப்படுவதை உணர்வீர்கள்.
நீங்கள் தியானிக்க தியானிக்க பிதா, குமாரன், பரிசுத்த ஆவி உங்களுக்குள் இருப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

அவருடைய உபதேசத்திலே நிலைத்திருந்த சீஷர்கள் கிறிஸ்து சிலுவை மரணத்தின்போது பெலவீனப்பட்டாலும் கிறிஸ்து உயிர்த்தெழுந்தபிறகு, அவர்களும் உயிர்த்தெழுந்த வல்லமையைப் பெற்றார்கள். **கிறிஸ்து சொன்னபடியே ஆவியானவர் அவர்களுக்குள் வந்து வாசம் செய்தார்.**
புதிய ஏற்பாட்டு நிருபங்களை வாசிக்கும்போது அவர்களின் பூரணமான வல்லமையை நாம் உணர்கிறோம்.
*குமாரன் விடுதலையாக்கினால் நாம் மெய்யாகவே விடுதலையடைவோம்.*
*அன்று அவர் கட்டளைகளை கடைபிடிக்கிறேன் என்று சொல்லி செய்யாதவர்கள், அவரிடம் வாக்குவாதம் செய்தவர்கள், அவரை எதிர்த்து கல்லெறியப் பார்த்தவர்கள், . . .*
*இன்றும் அவரை அறியாதவர்கள், விரும்பாதவர்கள், விசுவாசிக்கிறவர்கள் அனைவரையும் நோக்கி:*
நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.
*ஆத்மா கிறிஸ்துவினால் இளைப்பாறுதலைப் பெறும்போது, ஒன்றுக்கும் உதவாத இந்த மாம்சம் நம்மை மேற்கொள்ளாது.*
நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; என்றும்
நான் எந்த நிலையிலிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன் என்று சொல்லவும் அவருக்காக உற்சாகத்தோடு பிரயாசப்படவும் நம்மாலே முடியும்.

நம்மாலே காணமுடியாதபடி இருந்த சர்வவல்லமையுள்ள கர்த்தர்,
இயேசு கிறிஸ்துவாக மனுஷரூபமெடுத்து மனுஷருக்கு மத்தியில் வந்து,
தம்மிடத்தில் இருந்து கற்றுக்கொள்ளச் சொன்னார்
இப்பொழுதோ, ஆவியானவராக, மனுஷருக்கு மத்தியில் அல்ல,
**மனுஷர்களுக்குள்ளேயே** வாசம் செய்து வழிநடத்துகிறார்.

கிறிஸ்து நமக்குள்ளே ஆவியானவராக சாட்சிகொடுக்கிறார். புத்திரசுவிகாரத்தின் ஆவியைக் கொடுக்கிறார்., நம்மை நடத்துகிறார். . . உயிர்ப்பிக்கிறார்., **வாசமாயிருக்கிறார்**. .

**கர்த்தரே தேவன், இயேசுகிறிஸ்துவே கர்த்தர், கர்த்தரே ஆவியானவர்**
கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.

சகோதர சகோதரிகளே. ஒன்றை நாம் மறக்கக்கூடாது.
இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, **தேவனுக்கு அடிமைகளானதினால்**, பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்.
இனி நாம் பாவத்துக்கு அடிமையில்லை. நமது மாம்ச சிந்தனைக்கும் அடிமை இல்லை.
**அதேசமயம் கிறிஸ்துவால் விடுவிக்கப்பட்டது, நமது விருப்பத்துக்கு வாழ்வதற்கு அல்ல.**
இப்போ நாம் தேவனுக்கு அடிமை. அவர் நமது எஜமானர். அவர் வார்த்தையில் **நிலைத்திருந்து**, நாம் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவும் அவருடைய ராஜ்யத்துக்காக கிரியை செய்வதுமே நாம் அவருக்குள் வாழ்வதின் முக்கிய நோக்கம். அதன்பலன் பரிசுத்தம். முடிவு நித்தியஜீவன்.

யோவான்/John 17:4 (பக்கம்: 153)

பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.

**கிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக பிதாவை மகிமைப்படுத்தி, அவர் நியமித்த கிரியைகளை செய்து முடித்தேன் என்று சிலுவைபாடுக்கு முன்பே சொல்லக்கூடிய அளவில் சகலமும் அவருக்குள் பரிபூரணப்பட்டது.**

**வார்த்தையாக இருக்கும்** அவரில் **நிலைத்திருந்து, அவரிடம் கற்றுக்கொண்டு,** நாமும் இதே குறிக்கோளுடன் பிரயாசப்பட்டால், Scarboroughவிலும் Mississaugaவிலும் **நமது திருச்சபைக்கு அருகில் உள்ள அனைத்து மக்களும் நம்மோடு சேர்ந்து தேவனை ஆராதிக்கவும் அவர்களும் கிறிஸ்துவை விசுவாசிக்கவும்** கர்த்தர் கிரியை செய்வார். ஆமென்.

கன்மலையும் மீட்பருமான, **தேவனை நோக்கி கிறிஸ்து மூலமாக நம்முடைய வேண்டுதல்களை சமர்ப்பிக்க ஒருமனதோடு, அவருடைய வல்லமையை தரித்துக்கொண்ட விசுவாசத்தோடு எழுந்திருப்போமாக.** ஆமென்.

## Let us Pray

***யோசனையில் பெரியவரே செயலிலே வல்லவரே***

***எங்கள் யோசனைகள் சிறுகவும் உமது யோசனைகள் எங்களில் பெருகவும் வேண்டும் ஆண்டவரே.***

***ஆண்டவரே நீர் சிலுவையில் ஒப்புக்கொடுக்க போவதற்கு முன் ஜெபத்தில்,***

*பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.* ***என்று சிலுவை மரணத்துக்கு முன்பே ஜெபித்தீர்.***

***நாங்கள் உம்மில் நிலைத்திருக்க கிருபை செய்யும் ஆண்டவரே.***

***நாங்களும் இந்த பூமியிலே உம்மை மகிமைப் படுத்தினோம், நாங்கள் செய்யும்படி நீர் எங்களுக்கு நியமித்த கிரியைகளை செய்துமுடித்தோம் என்று எங்கள் மரணத்துக்கு முன்பாக சொல்ல எங்களை தகுதி படுத்தும்.***

***இந்த தகுதி எங்களாலே அல்ல, அது தேவனாலே உண்டாகிறது என்பதையும் எங்கள் இருதயத்திலே நிலைக்கச்செய்யும்.***

*சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,*
*பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.*

. . .. . . . ..